## 61

# சாத்தானைக் கட்டுவித்தல்

## (20:1-3)

வெளிப்படுத்தின விசேஷம் 20ஐப் பற்றி G. B. கேயர்டு என்பவர், "நாம் இப்போது, ... பித்துப் பிடித்தவர்கள் மற்றும் வெறியர்களின் பரதீசாக உள்ள ... வசனப்பகுதியொன்றிற்கு வந்துள்ளோம் ..." என்று எழுதினார்.[1] ஜான் ரிஸ்ஸீ என்பவர் இதை, "கிறுக்கர்களின் [kooks[2]] விளையாட்டு மைதானம்" என்று அழைத்தார். இந்த இவ்வதிகாரத்தில் "ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி" குறிப்பிடப்பட்டுள்ளது என்பதே இந்த ''விளையாட்டுக் களத்தின்'' அடிப்படை அமைப்பாக உள்ளது. ஃபிராங்க் பேக் என்பவர், "இந்தச் சில வசனங்கள், வேதாகமத்திலேயே மிகவும் முக்கியமான பகுதியாகவும் வேதவசனங்கள் முழுவதையும் விளக்குவதற்கு திறவுகோலாகவும் பலரால் பயன்படுத்தப்படுகின்றன" என்று கூறினார்.[3]

வெளிப்படுத்தின விசேஷம் 20 மிகவும் முக்கியமானதுதான், ஆனால் இது ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியின் அடையாளத்துவத்தைப் பயன்படுத்தும் காரணத்தினால் முக்கியமானதாக இருப்பதில்லை. "ஆயிரம் ஆண்டுகள்" என்பதற்கு வேதாகமத்தில் தரப்பட்டுள்ள வலியுறுத்தம் மிகவும் அப்பட்டமாக விகிதாச்சாரம் அற்றதாக உள்ளது. டக்ளஸ் எஸ்ஸெல் என்பவரின் கூற்றுப்படி, ஒரு தூரிகைவீச்சின்மீது கொண்ட மன ஈடுபாடு, ஏவுதல் பெற்ற சித்தரிப்பைப் பலர் தவறவிடுவதற்குக் காரணமாயிற்று. இது "ஒரு வால் நாயை ஆட்டுதல் என்ற விஷயம்போல் உள்ளது," என்று அவர் கூறினார்.[4]

வெளிப்படுத்தின விசேஷம் 20ச் சூழ்ந்துள்ள நேர்மாறான கருத்துக்களின் காரணமாக, "ஆயிரம் ஆண்டு அரசாட்சி பற்றிய கேள்விக்கு" நான் விரும்புவதைக் காட்டிலும் அதிகமான இடத்தை ஒப்புவிக்க வேண்டியிருக்கும். இது இவ்வதிகாரத்தின் வெற்றிகரமான செய்திக்குத் தடையாய் இருக்க மாட்டாது என்று நான் நம்புகின்றேன். W. B. வெஸ்ட் Jr., என்பவர், ''இதை முழுவதும் நீங்கள் முதல் - நூற்றாண்டுக் கண்ணாடிகளின் மூலமாகப் படித்தால், இது புரிந்து கொள்வதற்கு மிகவும் சுலபமான அதிகாரங்களில் ஒன்றாக உள்ளது'' என்று வலியுறுத்தினார்.[5] விஷயத்தை அவர் மிகைப்படுத்திக் கூறியிருக்கலாம்; ஆனால் நமது படிப்புக்களில் நீங்களும் நானும் பயன்படுத்தி வந்துள்ள கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வரையிலும், சிலர் இதைத் தோற்றமளிக்கச் செய்வதுபோல் இது அவ்வளவு கடினமானதாக இருப்பதில்லை.

இந்தப் பாடத்தில் நான், முதலில் அந்தக் கொள்கைகளில் சிலவற்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். பின்பு, சாத்தானைக்

*கட்டிவைத்தல் பற்றிப் பேசுகிற 1முதல் 3வரையிலான வசனங்களுடன் போராடுவோம்.*

## *பின்னணி*

***மொழிநடை இன்னமும் அடையாளத்துவமாகவே உள்ளது***

*முதலாவது, அடையாளங்களின் மூலமாகச் செய்தியை எடுத்துக் கொடுக்கும் இறைவெளிப்பாட்டுப் புத்தகம் ஒன்றை நாம் படிக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.[6] ஜிம் மெக்கைகன் என்பவர் சுட்டிக்காண்பித்தபடி, "நாம் சித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருக் கின்றோம்" என்பதை நினைவில் வைக்க வேண்டும் மற்றும் சித்திரங்களில் ஒன்றை நாம் பார்க்கும் ஒவ்வொரு வேளையிலும், "அது ஒரு சித்திரம்தான், ஆனால் அதன்மூலம் போதிக்கப்படும் சத்தியம் என்ன?" என்றும் கேட்க வேண்டும்.[7] இவ்விஷயத்தில் 20ம் அதிகாரம் வெளிப்படுத்தின விசேஷத்தின் வேறு எந்த அதிகாரத்தில் இருந்தும் மாறுபடுவதில்லை.*

***நாள்வரிசைமுறை இன்னமும் தற்செயலானதாகவே உள்ளது***

*அடுத்ததாக, வெளிப்படுத்தின விசேஷம் ஒரு கண்டிப்பான நாள்வரிசைமுறையை ஏற்படுத்த எவ்வித முயற்சியும் செய்வதில்லை என்பதை நினைவில் வைக்கவேண்டும். இந்தப்புத்தகம் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் நாள்வரிசைமுறையில் இருப்பதில்லை.[8] எடுத்துக் காட்டாக, 12ம் அதிகாரம் வெளிப்படுத்தின விசேஷத்தின் மத்தியபகுதியாக இருந்தாலும், அது இயேசுவின் பிறப்பில் இருந்து பல விபரங்களை நாள் வரிசைமுறையில் அளிக்கிறது.[9] உண்மையில், ஒரே விதமான அடிப்படைக் காலகட்டம் சற்றே மாறுபட்ட கண்ணோக்கக் கருத்துக்களுடன் இந்தப் புத்தகத்தில் மீண்டும் மீண்டும் கூறிமுடிக்கப்பட்டுள்ளது. முன்பு தரப்பட்ட வரைக்குறிப்பை[10] ஆய்வுசெய்யுங்கள், அப்போது நீங்கள், 17முதல் 19 வரையுள்ள அதிகாரங்கள் ஒரு பகுதியாக ("சபையின் விரோதிகளில் பெரும்பான்மையானவர்கள் அழிக்கப்படுகின்றனர்") பட்டியலிடப் பட்டுள்ள வேளையில், 20முதல் 22வரையுள்ள அதிகாரங்கள் ஒரு புதிய பகுதியாக ("வலுசர்ப்பத்தின் அழிவைத் தொடர்ந்து புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகுதல்") அமைவதைக் காண்பீர்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், 20ம் அதிகாரத்தில் நாம் (நாள்வரிசை முறைமையின்படி) திரும்பவும் தொடங்குகின்றோம்.*

*இது ஏன் மிகவும் முக்கியமானதாக உள்ளது? ஏனென்றால் இது, 20ம் அதிகாரமானது நாள்வரிசை முறைமையில் 19ம் அதிகாரத்தைப் பின்தொடருகிறது - மற்றும் 20ம் அதிகாரத்தின் கூறுகள் நாள் வரிசை முறைமையில் உள்ளன - என்று யூகிக்கும் சில (தவறான) நிலைப்பாடு களுக்கு அத்தியாவசியமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, 19ம் அதிகாரத்தின் முடிவுப்பகுதியானது இரண்டாம் வருகையைச் சித்தரிக்கிறது என்று சிலர் வலியுறுத்துகின்றனர். பின்பு நாள்வரிசை முறைமையில் இதைத்*

*தொடர்ந்து, 20ம் அதிகாரத்தில் சாத்தானைக் கட்டுவித்தல் என்ற நிகழ்ச்சி வருகிறது. பின்பு இதைத் தொடர்ந்து, ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்ற ''கொஞ்சக்காலம்'' (20:3; KJV) மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவை வருகின்றன என்று இவர்கள் கூறுகின்றனர். இருப்பினும், வசனப்பகுதியானது நாள்வரிசைமுறையிலான இந்த அணுகுமுறையை உறுதிப்படுத்துவதில்லை.*[11]

*20ம் அதிகாரம் நாள்வரிசை முறையில் 19ம் அதிகாரத்தைப் பின்பற்று கிறதா இல்லையா என்பது பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு இங்கு ஒரு கருத்து உள்ளது. 19ம் அதிகாரத்தில், ''பெரியோர் சிறியோர் ஆகிய எல்லா மனிதர்களுடைய … மாம்சத்தையும்'' உண்ணும்படிக்குப் பறவைகள் அழைக்கப்பட்டிருந்தன (19:18), இதை அவைகள் செய்தன (19:21). "எல்லா மனிதர்களும்'' அழிக்கப்பட்டிருந்தால், மற்றும் 19ம் அதிகாரத்தைத் தொடர்ந்து நாள்வரிசை முறைமையில் 20ம் அதிகாரம் வருமென்றால், சாத்தான் கட்டிவைக்கப்பட்டிருந்தபோது, அவன் வஞ்சித்துக் கொண்டிருந்த "ஜாதிகள்" (மக்களினங்கள்) யாராய் இருந்தனர் (20:3)?*[12]

### விரோதிகளை வெற்றிகொள்ளுதலின்மீதே இன்னமும் வலியுறுத்தம் உள்ளது

*வசனப்பகுதியானது ஒரு உச்சநிலைக் காட்சியைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டியானவரின் விரோதிகள் பின்வரும் வரிசைமுறையில் அறிமுகப்படுத்தப்பட்டனர்; வலுசர்ப்பம், இரண்டு மிருகங்கள் மற்றும் மகாபாபிலோன். இதன் தலைகீழான வரிசை முறையில் அவர்கள் தங்கள் அழிவை அடைந்தனர்: 17 மற்றும் 18ம் அதிகாரங்களில் மகாபாபிலோன், 19ம் அதிகாரத்தில் இரண்டு மிருகங்கள். இப்போது வலுசர்ப்பம் வீழ்ச்சியடையக் காலமாய் இருந்தது. அது வீழ்ச்சியடைய வேண்டியது அத்தியாவசியமானதாக இருந்தது. இது மற்ற விரோதிகளின் பின்புறம் இருந்த பலமாகும். இந்த வலுசர்ப்பமும் தடைசெய்யப்படாத வரையில் நிரந்தரமான மதிப்புள்ள ஏதொன்றும் சாதிக்கப்பட்டிராது. வலுசர்ப்பம் தண்டனைக்குத் தப்பிக்கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டால், அது தேவனுடைய மக்களைத் துன்புறுத்துதலைச் செயல்படுத்தப் புதிய கருவிகளைக் கண்டறியும்.*

*ரே சம்மர்ஸ் என்பவர், "ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி என்பதல்ல, ஆனால் சாத்தானைத் தூக்கியெறிதல் என்பதே இந்த அதிகாரத்தின் முதல் பத்து வசனங்களின் பிரதான ஆய்வுப்பொருளாக உள்ளது'' என்று வலியுறுத்தினார்.*[13] *''ஆயிரம் ஆண்டுகள்'' என்பதன் அடையாளத்துவம் இதற்குத் தற்செயலானதாக உள்ளது.*

*20ம் அதிகாரம் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியைக் குறிப்பிடுகிறது என்பதற்காக அல்ல, ஆனால் இது சாத்தானின் அழிவை அறிவிக்கிறது என்பதால், இந்த அதிகாரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது மற்றும் இது எவ்வளவு உணர்வெழுச்சியூட்டக் கூடியதாக உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கு எனக்கு வார்த்தைகள் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்: ஏவாளை வஞ்சித்து உலகம் சபிக்கப்*

*படுவதற்குக் காரணமான சாத்தான் (ஆதியாகமம் 3; 2 கொரிந்தியர் 3:11); உலகத்தில் பாவம் மற்றும் வேதனை யாவற்றிற்கும் பொறுப்பாளியான சாத்தான், தலைமுறைக்குப் பின் தலைமுறையாக நூற்றாண்டுகளுக்குப் பின் நூற்றாண்டுகளாக மனிதர்களின் வாழ்வைச் சிறுமைப்படுத்தி வருகின்றவனான சாத்தான்; நமது சொந்த வாழ்வில் வெட்கக்கேட்டையும் மனவேதனையையும் கொண்டு வந்துள்ளவனான சாத்தான். இந்தப் பயங்கரமான, கொடூரமான, தீமை விளைவிக்கின்ற, கடும்செயல் புரியும் உயிரினமானது, கர்த்தரைப் பின்பற்றுகின்றவர்களின் முன்னிலையில் இருந்து ஒருநாளில் வெளியேற்றப்படும்! அது நீங்கிச் சென்றுவிடும்! அது என்றென்றைக்குமாக நீங்கி சென்று விடும்! அது எவ்வளவு அற்புதமான செய்தி! "மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்; அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (20:10).*

### *முற்றிலுமான மனப்பதிவு இன்னமும் மிகவும் முக்கியமானதாக உள்ளது*

*இவ்வதிகாரம் கடினமான பகுதிகளைக் கொண்டுள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்ளாவிட்டால், நான் நேர்மை குறைந்தவனாகி விடுவேன். "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது" சாத்தான் விடுதலையாகுதல் என்பது [அவ்வகையானது கடினமான பகுதிகளில்] ஒன்றாக உள்ளது (20:7; வசனம் 3ஐக் காணவும்). இவ்வதிகாரத்தைப் பற்றி ஒருவர் எவ்விதமான நிலைப்பாட்டை மேற்கொண்டாலும், சிரமங்கள் இருக்கவே செய்கின்றன. இருப்பினும் இவ்விஷயம், ஒவ்வொரு அதிகாரத்தைப் பொறுத்த வரையிலும் கூட உண்மையாய் இருப்பதில்லையா? வெளிப்படுத்தின விசேஷத்தின் எந்த வசனப்பகுதியின் செய்தியும் மறைவான விபரங்களில் அல்ல, ஆனால் அது நமது சிந்தையில் விட்டுச்செல்லும் முற்றுன மனப்பதிவிலேயே உள்ளது என்பதை உங்களுக்கு நான் மீண்டும் நினைவூட்டுகின்றேன்.*

*20ம் அதிகாரத்தை வாசிப்பதற்குச் சற்று நேரம் எடுத்துக்கொண்டு, அதைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். அங்கே நீங்கள் கண்டறியும் செய்தி என்ன? அது நிச்சயமாகவே பின்வருவதாகவே உள்ளது: ஆட்டுக்குட்டி யானவரைப் பின்பற்றுபவர்கள் வெற்றியடைகின்றனர், அதே வேளையில் சாத்தானைப் பின்பற்றுகின்றவர்கள் தோல்வியடைகின்றனர்! சற்றுநேரத்திற்கு, சங்கிலிகள், அரியணைகள் மற்றும் காலத்தின் வேளைகள் ஆகியவற்றைப் பற்றி மறந்துவிடுங்கள். இந்த சிந்தனையை உங்கள் சிந்தையில் அடைத்துவைத்துவிடுங்கள்: ஆட்டுக் குட்டியானவரைப் பின்பற்றுபவர்கள் வெற்றியடைகின்றனர், அதே வேளையில் சாத்தானைப் பின்பற்றுகின்றவர்கள் தோல்வியடைகின்றனர்! அதுதான் நீங்கள் 20ம் அதிகாரத்தில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இது முதல் நூற்றாண்டிற்கு முக்கியமான செய்தியாக இருந்தது. இன்றைய நாட்களிலும் அவ்வாறே முக்கியமான செய்தியாக உள்ளது!*

# *கட்டிவைத்தல் (20:1-3)*

*இந்தச் சிந்தைனைகளைச் சிந்தையில் கொண்டவர்களாய் நாம், 20:1-3ஐக் கண்ணோக்குவோமாக. இந்த வசனங்களைப் பற்றிய நமது படிப்பானது, பல கொள்கைகளை, அவைகள் இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட வகையில் விவரிக்கும்.*

*20ம் அதிகாரம், "ஒரு தூதன்[14] பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும்* [in[15] his hand] *தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்தி லிருந்திறங்கிவரக் கண்டேன்[16]'' என்று தொடங்குகிறது (வசனம் 1). பாதாளக்குழியானது (சிலவேளைகளில் இது* "the bottomless pit" *என்று அழைக்கப்படுகிறது), இந்தத் தற்காலத்தில் துன்மார்க்கருடைய இருப்பிடத்தின் அடையாளத்துவமாக உள்ளது என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம்.[17] பாதாளக்குழி என்பது நரகம் அல்ல. இந்த அதிகாரத்தின் 10ம் வசனத்தின் நிகழ்ச்சி வரும் வரையிலும், சாத்தான் நித்திய அக்கினிக் கடலிலே தள்ளப்படமாட்டான்.*

*பாதாளக்குழியைப் பற்றி நாம், 9ம் அதிகாரத்தில் முதன்முதலாக வாசிக்கின்றோம், அங்கே வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்திற்கு "பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது" (9:1). இந்த "நட்சத்திரம்'' (ஒருவேளை இது ஒரு தூதனாக இருக்கலாமோ?) பாதாளக்குழியைத் திறந்துபோது, வதைக்கும் வெட்டுக்கிளிகள் மொய்த்துக்கொண்டு முன்வந்தன. 20ம் அதிகாரத்தில் உள்ள தூதன், 9ம் அதிகாரத்தின் "நட்சத்திரமாக" இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். அது யாராயிருந்தாலும், அவர் தேவனுடைய செய்தியாளராக இருந்தார் மற்றும் இவ்விதமாக அவர் தேவனுடைய ஊழியத்தை நிகழ்த்தக்கூடியவரா யிருந்தார். பிசாசானவனைக் கீழ்ப்படுத்துதல் என்பதே அவரது ஊழியமாயிருந்தது.*

*மரியாதைக்குரிய தோல்விகள் உள்ளன, வெட்கக்கேடு நிறைந்த தோல்விகளும் உள்ளன. இந்தத் தரிசனத்தில் சாத்தான் கீழ்மைப்படுத்தப் பட்டது மட்டுமின்றி; சங்கடப்படுதலுக்கும் உள்ளானான். அவனுடைய வீரச்செயல் (வானத்தில் இருந்து நட்சத்திரங்களை விழச்செய்தல் [12:4], மற்றும் இதுபோன்ற) எல்லாவற்றிற்கும் பின்பு, அவனைக் கீழ்ப்படுத்துவதற்குப் பெயர் அறியப்படாத ஒரு தூதனே போதுமானவராயிருந்தார்!*

#### ***அடையாளத்துவமான திறவுகோலும் சங்கிலியும்***

*தூதன் ''பாதாளத்தின் திறவுகோலை'' வைத்திருந்தார் என்பது, அவருக்குப் பாதாளத்தின்மீது அதிகாரம் தரப்பட்டிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது: அதாவது, பாதாளத்தைத் திறப்பதற்கும் அல்லது மூடுவதற்குமான அதிகாரம்.[18] அத்துடன் கூடுதலாக அவர், சாத்தானைக் கட்டுவதில் பயன்படுவதற்கு ஒரு பெரிய சங்கிலியை வைத்திருந்தார். இது, ரோமர்கள் கைதிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்திய சங்கிலியைப் போல் இருந்தது. (இதே வார்த்தை நடபடிகள் 12:7; 28:20 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.)*

“இந்தத் திறவுகோல் என்பது நேரடி அர்த்தமானதா? இந்தச் சங்கிலி என்பது நேரடி அர்த்தமானதா?'' என்று கேட்பதற்கு நாம் சற்றே தாமதிப்போம். வெஸ்ட் என்பவர் பின்வரும் கேள்விகளை முன்வைத்தார்: “இவைகள் நேரடி அர்த்தமானவைகள் என்றால், இவைகள் எவ்வகையான திறவுகோலும் சங்கிலியுமாயிருந்தன? அவைகள் இரும்பினால் ஆனவையா யிருந்தனவா? அவைகள் வெள்ளியினால் ஆனவைகளாயிருந்தனவா? அவைகள் தங்கத்தினால் ஆனவையாய் இருந்தனவா? அவைகள் மரத்தினால் ஆனவையாயிருந்தனவா? அல்லது என்ன வகையானவையாய் இருந்தன?”[19] முதல் மூன்று வசனங்களைப் பொறுத்தமட்டில் இவைபோன்ற கேள்விகள் இன்னும் அதிகமாய்ப் பெருக்கப்பட முடியும்: பாதாளக்குழி என்பது மிகவும் ஆழமான ஒரு துளையாக, தரையில் மிகுந்த ஆழத்தில் இருந்ததா? வலுசர்ப்பமானது மாம்சமும் எலும்பும் கொண்ட ஒரு ஜந்துவாய் இருந்ததா? அடையாளங்கள் கொண்ட இறைவெளிப்பாட்டு மொழிநடையுடன் நாம் ஈடுபாடு கொண்டுள்ளோம் என்பது மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவூட்டப்படுகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தின் சொற்றொடர்களை (நேரடி அர்த்தக்காரர்களின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால்) “ஆவித் துவப்படுத்துதல்” என்பதைச் செய்பவர்கள் மீது நேரடி அர்த்தக்காரர்கள் (குறிப்பாக ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கைக்காரர்கள்) விரோதத்துடன் பேசுகின்றனர். அவர்கள், அவர்கள் மாத்திரமே “வேதவசனங்களை நேரடியாக அர்த்தம் கொள்வதாக” பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். இருப்பினும், அவர்கள் தங்களின் தனிப்பட்ட காட்சியமைவில் பொருந்தாத எதையும் “ஆவித்துவப்படுத்த” தயங்குவ தில்லை என்பதே விஷயத்தின் உண்மையாக உள்ளது. அவர்கள், அந்தத் திறவுகோல் [Yale lock[20]] திண்டுக்கல் பூட்டிற்காகச் செய்யப்பட்டிருப் பதில்லை, அந்தச் சங்கிலியானது இரும்பினால் செய்யப்பட்டிருப்பதில்லை, மற்றும் பாதாளம் என்பது நேரடியான அர்த்தத்தில் பாதாளக்குழியாக இருப்பதில்லை என்பதை ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளனர்.

நாம் படித்துக்கொண்டிருக்கும் வரலாற்றுக்கு திரும்புவோம்: தூதன், “பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை ... பிடித்து” (வசனம் 2அ). பகைவனை அடையாளம் கண்டு கொள்வதில் நமக்கு இடர்ப்பாடு எதுவும் இருப்பதில்லை. இதே சொற் றொடர்கள் 12:9ல் இவனை அடையாளப்படுத்தின. இவன், “மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் ... யுத்தம் பண்ணி ... வெற்றி கொள்ளப் பட்டவனாக (12:7, 8), மேசியாத்துவ சமூகத்தை வெள்ளப் பெருக்கினால் அடித்துக் கொண்டுபோக முயற்சி செய்தவனாக (12:15), மற்றும் தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டு என்று அறிந்தவனாக (12:12) இருக்கின்றான்” என்று நமக்கு ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. [21]

### அடையாளத்துமான ஆயிரம் ஆண்டுகள்

தூதன் சாத்தானைப் பிடித்து பின்பு, அவர்[தூதன்], “அவனை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்தார்'' (வசனம் 2ஆ). இவ்விடத்தில்தான்

புகழ்பெற்ற (அல்லது புகழ் அற்ற) "ஆயிரம் ஆண்டுகள்" பற்றிய முதல் குறிப்பிடுதல் உள்ளது. இந்தச் சொற்றொடர்பற்றி நான் அடுத்த இரு பாடங்களில் நீளமாய்க் கலந்துரையாடுவேன், ஆனால் நான் முன்னதாகச் சென்று பின்வரும் முக்கியமான கேள்வியைக் கேட்பதற்கு என்னை அனுமதியுங்கள்: இது நேரடியான அர்த்தத்தில் ஆயிரம் ஆண்டுகளாக இருக்கிறதா? திறவுகோல், சங்கிலி, பாதாளம் மற்றும் வலுசர்ப்பம் ஆகியவை அடையாளத்துவமானவைகளாய் இருக்கின்றன என்றால், ஆயிரம் ஆண்டுகள் என்பது மாத்திரம் நேரடியான அர்த்தத்தில் ஒரு காலகட்டமாக உள்ளது என்று சிலர் எந்த அடிப்படையில் வலுயுறுத்துகின்றனர்? வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் படித்துக் கடந்து வந்திருக்கையில், நூற்றுக்கணக்கில் அடையாளத்துவ எண்களை எதிர்கொண்டு இருந்திருக்கின்றோம். ஏழு பரிசுத்த ஆவிகள் இல்லை என்றும் 1:4ல் உள்ள "ஏழு" என்ற எண் அடையாளத்துவமானது என்றும், நாம் வலியுறுத்தியுள்ளோம். இரட்சிக்கப்பட்ட எல்லாருக்கும் அடையாளமாக (7 மற்றும் 14ம் அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்டபடி) 144,000 என்ற எண் இருக்கிறது, பரலோகத்திற்கு இந்த எண்ணிக்கையுள்ள மக்கள் மாத்திரம் செல்வார்கள் என்று கூறக்கூடாது என்ற கருத்தை நாம் பராமரித்துள்ளோம். இந்த எண்கள் அடையாளத்துவமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால், 20ம் அதிகாரத்தில் "ஆயிரம்" என்பது நேரடி அர்த்தமானது என்று யாரேனும் ஒருவர் நினைக்க வேண்டியது ஏன்?[22] தாமஸ் டொர்ரென்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> பத்துத் தலைகளும் ஏழு கொம்புகளும் உள்ள பெரும் விலங்கினை நாம் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளாதிருப்பதுபோன்றே இந்த ஆயிரம் ஆண்டுகள் நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்வதற்கும் நமக்கு எவ்வித உரிமையும் இருப்பதில்லை. ஆயிரம் ஆண்டுகள் என்பதை அதற்குரிய இறையியல் வெளிப்பாட்டுக் காட்சிமைவில் இருந்து கீழே வரலாற்றின் சாதாரண இடத்திற்குக் கொண்டு வந்து, அதை உலகப் பிரகாரமான கணக்கியலாளர் ஒருவர் கையாண்டு, கணக்கீடுகளினால் பெருக்கி உலகத்தின் முடிவைக் கண்டுபிடிக்க முடியும் என்பதுபோல் செய்வது முற்றிலும் சரியான இடத்தில் இருப்பதில்லை.[23]

''ஆயிரம்'' என்ற எண் அடையாளத்துவமாக உள்ளது (மற்றும் வேறுவகையாக நம்புவதற்குக் காரணம் எதுவும் இல்லை) என்றால், இது எதனை அடையாளப்படுத்துகிறது? வெளிப்படுத்தின விசேஷத்திற்கான அறிமுகப்பாடத்தில் நாம், ''பத்து'' என்ற எண் முழுமைத்தன்மையைக் குறிக்கிறது என்று கண்டோம் - அனேகமாக இது, எந்த ஒரு நபரும் (தனது கைகள் அல்லது கால்களில்), மொத்தம் பத்து விரல்களைக் கொண்டிருத்தல் என்ற உண்மையில் இருந்து முளைத்ததாய் இருக்கலாம். பத்தின் மடிப்பெருக்க எண்களைப் (நூறு மற்றும் ஆயிரம்) பயன்படுத்துதல் என்பது இந்தக் கருத்திற்குச் செறிவூட்டுகிறது என்பது பற்றியும் நாம் குறிப்பிட்டிருந்தோம்.[24] "ஆயிரம்" (பத்து பெருக்கல் பத்து பெருக்கல் பத்து) என்று கூறுதலானது ''முழுமைத்தன்மையின் முழுமைத்தன்மையின்

முழுமைத்தன்மை’’[25] என்று அர்த்தப்படுத்திற்று. சாத்தானை “ஆயிரம் ஆண்டுகள்” கட்டிவைத்தல் என்பது, அவன் *முற்றிலுமாகக்* கட்டிவைக்கப் பட்டான் என்று கூறுவதற்கான அடையாளத்துவ வழிமுறையாக இருக்கிறது.

**அடையாளத்துவமான கட்டிவைத்தல்**

அந்தக் கடைசிக் கூற்றில் இருந்து நாம் எந்த ஒரு முடிவையும் தரவழைப்பதற்கு முன்பு, ‘‘கட்டுதல்’’ என்பது எதை அடையாளப் படுத்துகிறது, இது ஏற்கனவே நடைபெற்றுவிட்டதா அல்லது இது கிறிஸ்து மறுபடியும் வரும்போது நடைபெறுமா என்பவற்றைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சாத்தான் கட்டிவைக்கப்படுதல் என்பது பற்றி வேதவசனங்களில், மத்தேயு 12 என்ற இன்னொரு இடத்தில் மாத்திரம் நாம் வாசிக்கின்றோம் (இத்துடன் இதன் இணைவசனங்களான மாற்கு 3 மற்றும் லூக்கா 11 ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ளவும்). அந்த வேளையில், இயேசு பிசாசின் வல்லமையால் அசுத்த ஆவிகளைத் துரத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். அவர், “அன்றியும், பலவானை முந்திக்கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக்கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்” என்று அவர் கூறினார் (மத்தேயு 12:29). இயேசுவின் விவரிப்பில் அவர், “பலவானுக்கும்” சாத்தானுக்கும் இடையில் மற்றும், “வீட்டைக் கொள்ளையிடுதலுக்கும்” அசுத்த ஆவிகளைத் துரத்துதலுக்கும் இடையில் ஒரு இணையைத் தரவழைத்தார். இயேசு பலவானை (அதாவது சாத்தானை) “கட்டியிருந்தபடியால்” அவரால் அசுத்த ஆவிகளைத் துரத்த முடிந்தது என்று இவ்வசனப்பகுதியில் இருந்து நாம் முடிவு செய்கின்றோம்.

சாத்தானை ‘‘கட்டுதல்’’ என்பது இயேசுவின் பிறப்பில் தொடங்கி, இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் உச்சநிலைக் காட்சியை அடைந்தது என்று வேதவசனங்கள் போதிக்கின்றன. “வாக்குத்தத்தங்கள் யாவற்றிற்கும் தாய்போன்றுள்ள” வாக்குத்தத்தத்தில் (ஆதியாகமம் 3:15), ஸ்திரீயின் வித்து (இயேசு), சர்ப்பத்தின் (பிசாசின்) தலையை நசுக்குவார், அதுபோன்று அவரது காலும் நசுக்கப்படும் என்பது முன்னுரைக்கப்பட்டது. இது, இயேசு சிலுவையில் மரித்தபோதும் பின்பு உயிரோடு எழுந்தபோதும், சாத்தானுக்கும் அவனது அதிகாரத்திற்கும் விடுத்த ‘‘மரண அடியை’’க் குறிக்கிறது என்று பெரும்பான்மையான கல்வியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இந்த வாக்குத்தத்தமானது மத்தேயு 12 மற்றும் இவை போன்ற வசனப்பகுதிகளில் நிறைவேற்றப்பட்டது என்பது தெளிவு.

எழுபது சீஷர்களை இயேசு அனுப்பியபின்பு, அவர்கள் “ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது” என்று கூறிக்கொண்டு சந்தோஷத்துடன் திரும்பி வந்தனர் (லூக்கா 10:17). அதற்கு இயேசு, ‘‘சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்” என்று பதில் அளித்தார் (வசனம் 18). முந்திய

*பாடம் ஒன்றில் விளக்கப்பட்டதுபோல், இந்த "வீழ்ச்சி" என்பது சாத்தானுடைய மூலத்தோற்றத்தைக் குறிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக, அசுத்த ஆவிகளைத் துரத்துவதில் இயேசுவின் சீஷர்களுடைய திறமையினால் செயல்விளக்கப்படுத்தப்பட்டபடி, மனுக்குலத்தின்மீது சாத்தான் கொண்டிருந்த பிடியானது தளர்ந்ததைக் குறித்தது.[26]*

*யோவான் 12ம் அதிகாரத்தில் இயேசு, ''தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறார்" என்பதைப் பற்றி பேசினார் (வசனங்கள் 32, 33), அவர், "இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்'' என்றார் (வசனம் 31). யோவான் 16ல் அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், "இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப் பட்[டான்]" என்று கூறினார் (வசனம் 11).*

*இயேசுவின் மரணத்தைப் பற்றிப் பவுல் (கொலோசெயர் 2:14ல்), இயேசுவின் மரணம் "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கிற்று'' (வசனம் 15) என்று குறிப்பிட்டு எழுதினார். யோவான், ''பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்'' என்று கூறினார் (1 யோவான் 3:8). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு" இயேசு மரித்தார் என்று விளக்கப்படுத்தினார் (எபிரெயர் 2:14).*

*கடைசியாக, வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரத்தில் நாம் வசனப்பகுதியைக் கொண்டுள்ளோம். அங்கு சாத்தான் "கீழே தள்ளப் பட்டிருப்பதாக"ப் பேசப்படுகின்றான் மற்றும் "ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே'' ஜெயங்கொள்ளப்பட்டது என்று கூறப்படுகிறது (வசனங்கள் 10, 11).[27] சாத்தான்மீதான இந்த வெற்றியானது இயேசுவின் இரண்டாம் வருகையுடன் அல்ல, ஆனால் அவரது முதல் வருகையுடன் பிணைக்கப்பட்டுள்ளது: இந்த அதிகாரம் இயேசுவின் பிறப்பைக்கொண்டு தொடங்குகிறது (வசனங்கள் 1, 5) மற்றும் இது இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றினால் உச்சக் காட்சியை அடைகிறது (வசனங்கள் 5, 11).*

*எனவே சாத்தான் "ஆயிரம் ஆண்டுகள் காலத்திற்குக் கட்டிவைக்கப் பட்டு" இருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்தினாலும், அது இயேசுவின் மனித அவதாரத்துடன் தொடங்கும் காலகட்டத்துடன் தொடர்புபடுகிறது. இது இயேசு மறுபடியும் வரும் காலத்திற்குப் பிந்தியதாக உள்ள கற்பனையான யுகமாக இருப்பதில்லை.*

*இருப்பினும், நாம், சாத்தான் எந்தக் கருத்தில் கட்டப்பட்டுள்ளான் என்பதைப் பற்றி இன்னமும் எதையும் நிலைநாட்டவில்லை. "கட்டிவைத்தல்" என்பது "திறனற்றுப்போகும்படி செய்தல்" என்று அர்த்தப் படுவதாகப் பலர் யூகித்துள்ளதால், சாத்தான் இப்போது கட்டிவைக்கப் பட்டுள்ளான் என்ற கருத்தை அவர்கள் ஏளனம் செய்கின்றனர். அவர்கள், பிசாசு தொடர்ந்து உலகத்தில் செயல்படுவதைக் குறிப்பிடும் வேதாகம வசனங்களைச்[28] சுட்டிக்காண்பித்து, "உலகத்தில் இவ்வளவு அதிகமாகக்*

கலவரங்களும் இடர்ப்பாடுகளும் இருக்கும் போது, சாத்தான் கட்டிவைக்கப்பட்டுள்ளான் என்று நீங்கள் எப்படிக் கூறமுடியும்?" என்று கேட்கின்றனர்.[29] ஒரு எழுத்தாளர், "இன்றைய நாட்களில் சாத்தான் கட்டிவைக்கப்பட்டுள்ளான் என்றால், அவன் உண்மையில் மிகவும் நீளமான சங்கிலியினால் கட்டிவைக்கப்பட்டு இருக்க வேண்டும்" என்று பரியாசத்துடன் கூறினார்!

"கட்டிவைத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "திறமையற்றவராக்குதல்" என்றோ அல்லது "செயல்பட இயலாதவராக்குதல்" என்றோ அர்த்தப்படுவதில்லை. பவுலைக் கட்டி வைத்திருந்த சங்கிலியைப் பற்றிக்குறிப்பிடவும் (நடபடிகள் 28:20) அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, அவர் இவ்விதமாகக் கட்டப்பட்டிருந்தபோது, துடிப்புள்ள - ஆயினும் கட்டுப்படுத்தப்பட்ட - வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தினார்.[30] மீண்டுமாக, இதே வார்த்தை ரோமர் 7:2ல் ஒரு உருவகக் கருத்தமைவில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது ஒரு மனைவி "தன் கணவன் உயிரோடிருக்கையில், பிரமாணத்தினால் அவனுடன் கட்டப்பட்டு" இருத்தல் பற்றிபேசுகிறது. "கட்டப்பட்ட" பெண் எல்லா வழிகளிலும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது இல்லை, ஆனால் ஒரு குறிப்பிட்ட வழியில் மாத்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றாள்: அவள் தனது கணவன் உயிரோடிருக்கையில் மறுமணம் செய்துகொள்வதை நியாயப்பிரமாணம் அனுமதிக்கவில்லை (ரோமர் 7:3).

சாத்தான் "கட்டுப்பட்டு" இருத்தல் பற்றி நமது வசனப்பகுதி விளக்கியுரைத்து வரையறைப்படுத்துகிறது: 3ம் வசனம், அவன் "ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு" கட்டிவைக்கப்பட்டான் என்று கூறுகிறது.[31] 8ம் வசனம், சாத்தான் விடுவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அவன், "ஜாதிகளை மோசம்போக்க"க் கூடியவன் ஆனான் என்று குறிப்பிடுகிறது. அப்படியானால், சாத்தான் எல்லா விதத்திலும் கட்டிவைக்கப்பட்டிருக்க வில்லை, அவன் ஜாதிகளை மோசம்போக்கும் விஷயத்தில் கட்டிவைக்கப் பட்டிருந்தான்.

இதை நாம், இதற்கு முன்பு குறிப்பிட்ட வசனப்பகுதிகளுடன்[32] - அத்துடன் கூடுதலாக, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நித்திய நோக்கம் பற்றிப் பேசுகின்ற மற்ற வசனப்பகுதிகளுடன் - பிணைக்க முடியுமா என்று பார்ப்போம்:

சாத்தானின் காரணமாக, மரணமும் பாவமும் இந்த உலகத்திற்குள் வந்தன. இவற்றின் மூலமாகப் பிசாசானவன் மனிதகுலத்தின்மீது ஒரு பலமான சிறைப்பிடிப்பை ஆதாயப்படுத்திப் பராமரித்து வந்தான். ஆயினும் தேவன், "பெண்ணின் வித்து" என்னப்படுபவர் வந்து சாத்தானுடைய அதிகாரத்திற்கு மரண அடிகொடுப்பார் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். மேலும் அவர், இந்த "வித்து" மனிதகுலத்தை - அதாவது பிசாசினால் வாதைக்குள்ளான எல்லாரையும் - ஆசீர்வதிக்கும் என்றும் வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார் (ஆதியாகமம் 22:18).

இந்த வாக்குத்தத்தத்தைப் பலன்கொடுப்பதாக்குவதற்கு, தேவன் ஒரு மக்களினத்தைப் பிரித்தெடுத்து அமைத்தார், அது இஸ்ரவேல் (யூதர்கள்)

என்ற மக்களினமாயிருந்தது. பழைய ஏற்பாட்டுக் காலகட்டத்தில் உலகத்தின் எஞ்சிய மக்களினங்கள்மீது செல்வாக்குச் செலுத்துவதற்குப் பரவலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால் பெரும்பாலும், அறியாமையே மிகுந்திருந்தது, சாத்தான் மக்களினங்களை மோசம் போக்கும் வழியைத் தாராளமாய்க் கொண்டிருந்தான்.

கடைசியாக, இயேசு உலகத்திற்கு வந்தார், அவர் சாத்தானின் அதிகாரத்தை அழித்தல் என்ற கோட்பாடு மிகுந்த நோக்கத்துடன் வந்தார். இதற்குப் பதில் அளிக்கும் வகையில், பிசாசானவன் இயேசுவின் செயல்திட்டத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மற்றும்/அல்லது அவரை அழிக்கும் வகையில் ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டான். சாத்தான் இவ்வாறு செய்கையில், அவன் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தான்: அவன் இயேசுவைப் பாவம் செய்யும்படி நேரடியாகத் தூண்டிவிட முயற்சி செய்தபோது, தோல்வியுற்றான் (மத்தேயு 4). அவன் இயேசுவைப் பாவம் செய்யும்படி மறைமுகமாகத் தூண்டிவிட முயற்சி செய்தபோது, தோல்வியுற்றான் (மத்தேயு 16:23). அவனால், தனது அசுத்த ஆவி உதவியாளர்களை, கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் துரத்துவதைக் கூடத் தடைசெய்ய முடியாதிருந்தது. கட்டுப்பாடு நழுவுவதை உணர்ந்த சாத்தான், ரோமச்சிலுவையில் இயேசுவை அறையும்படி முயற்சி செய்யுமாறு யூதாஸையும் யூதத் தலைவர்களையும் தூண்டிவிட்டு முயற்சிசெய்தான்.

இயேசுவின் மரணமும் அதைத் தொடர்ந்து வரும் அவரது உயிர்த்தெழுதலும், பிசாசானவனுடைய தோல்வியின் அடிப்படைக் காரணிகளாய் இருக்கும் என்பதை அவன் (பிசாசானவன்) உணர்ந்து அறியவில்லை என்பது உறுதி (அவன் சகலமும் அறிந்தவனாய் இருப்பதில்லை).[33] இயேசுவின் மரணம், பாவத்தின் அதிகாரத்தை அழித்தது; இயேசுவின் உயிர்த்தெழுதல், மரணத்தின் அதிகாரத்தை அழித்தது. "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரிந்தியர் 15:55-57)!

இயேசுவின் பலியினுடைய பலன்கள் யூதர்களுடன் மாத்திரம் கட்டு படுத்தப்பட்டிருக்கவில்லை, ஆனால் அவைகள் மனிதகுலம் முழுமைக்கு மானதாக இருந்தன. கீழ்ப்படிந்து விசுவாசிக்கும் ஒவ்வொருவரும், அவர் மூலமாகச் சாத்தானின் கட்டுகளைத் தூக்கியெறிய முடியும். இவ்வாறாக, எல்லா மக்களினங்களுக்கும் இரட்சிப்பின் செய்தியை எடுத்துச் செல்லும்படி, இயேசு தமது சீஷர்களுக்கு கூறினர் (மத்தேயு 28:18-20). பேதுரு முதன்முறையாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, இரட்சிப்பு என்பது யூதர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் ''தூரத்தில் இருந்த'' அனைவருக்குமானது என்று அவர் வலியுறுத்தினார் (நடபடிகள் 2:39).

சாத்தான், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியதன் மூலம் சுவிசேஷம் பரவுதலைத் தடைசெய்ய முயற்சித்தான், ஆனால், அவனுடைய முயற்சிகள் தோல்வியுற்றன. துன்புறுத்தப்படுதலானது,

*நற்செய்தியை எருசலேமுடன் மாத்திரம் சுருக்கிவைப்பதற்குப் பதிலாக, அது பரவும்படி வகை செய்தது (நடபடிகள் 8:1-4). அந்த வேளையில் பிசாசினுடைய பிரதான கருவியாக இருந்த தர்சு நகரத்து சவுலைக்கூட கர்த்தர் மனமாற்றினார். இயேசு (பிற்பாடு பவுல் என்று அழைக்கப்பட்ட) சவுலுக்கு, புறஜாதியாரிடம் (யூதரல்லாதவரிடம்) செல்லும்படிக்கான கட்டளையைக் கொடுத்தார்:*

> *... உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். ... அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு, தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு ... (நடபடிகள் 26:16-18).*

*சுவிசேஷம் எங்கெல்லாம் சென்றதோ, அங்கெல்லாம் ஏற்றுக்கொண்ட இருதயங்களில் இருந்த இருள் விலகியோடி, வெளிச்சம் அவற்றில் மேற்கொண்டது (கொலோசெயர் 1:13; 1 தெசலோனிக்கேயர் 5:4; 1 பேதுரு 2:9). "ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால்" (வெளிப்படுத்தின விசேஷம் 12:11) சாத்தான்மீது வெற்றிகள், நூற்றுக்கணக்கில் - ஏன், ஆயிரக்கணக்கிலும்கூட - குவிக்கப்பட்டன. முதல் நூற்றாண்டின் முடிவுக்கு முன்னதாகவே, சுவிசேஷம் "வானத்தின் கீழிருக்கும் சகலசிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது" என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 1:23). சாத்தான், ஒருபோதும் குணமடைய இயலாத அளவுக்குப் பெரிய அடியைப் பெற்றிருந்தான். 12ம் அதிகாரம், நாம் இப்போது ஒரு காயப்பட்ட, தோல்வியுற்ற விரோதியுடன் யுத்தம் செய்கின்றோம் என்று கூறுகிறது.[34] 20ம் அதிகாரமும் அடிப்படையில் இதே சத்தியத்தைப் போதிக்கிறது, ஆனால் இது மாறுபட்ட உருவகம் ஒன்றைப் பயன்படுத்துகிறது: நாம் இப்போது, கட்டப்பட்டு இருக்கிற ஒரு விரோதியுடன் யுத்தம் செய்கின்றோம்.*

*இது, பிசாசானவன் இனியும் செயல்துடிப்புடன் இருப்பதில்லை என்று அர்த்தப்படுகிறதா? இல்லவே இல்லை. இது, சாத்தான் (இப்போது) சபையையும் கிறிஸ்தவர்களையும் அழிக்க முயற்சிசெய்வது இல்லை என்று அர்த்தப்படுகிறதா?[35] இல்லை. இது, பிசாசானவன் தன்னுடன் இயன்ற அளவுக்கு அதிகமானவர்களை நகரத்திற்கு இழுத்துச்செல்ல நோக்கமாய் இருப்பதில்லை என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. ஓவன் கிரவுச் என்பவர், இதைப் பின்வருமாறு கூறினார்: இப்போது சாத்தான் "வரையறைக்குட்பட்டுள்ளான், அவன் நீர்மப்படுத்தப்படவில்லை."[36]*

*பிசாசை "கட்டுதல்" என்பது, அவனது அதிகாரம் குறுக்கப்பட்டு இருக்கிறது என்று அர்த்தப்படுகிறது. கர்த்தர் சாத்தானைப் பலவழிகளில் வரையறைக்கு உட்படுத்தியிருக்கின்றார்: அவனால் வசனத்தை அழிக்க முடியாது (மத்தேயு 24:35; 1 பேதுரு 1:25). அவனால் சபையை அழிக்க முடியாது (மத்தேயு 16:18). அவன் கிறிஸ்தவர்களை துன்புறுத்தக்கூடிய*

*வழியில் கட்டப்படுத்தப்பட்டுள்ளான். அப்போஸ்தலர்களின் நாட்களில் செய்ததுபோல், இனியும் அவன், மனிதர்களுக்குள் புகுந்து, அவர்களை அவர்களின் சுய விருப்பத்திற்கு எதிராகக் கட்டுப்படுத்த முடியாது. இனியும் அவன், கிறிஸ்தவர்களை அவர்களின் திராணிக்கு மிஞ்சி சோதிக்க முடியாது (1 கொரிந்தியர் 10:13; 2 பேதுரு 2:9). உண்மையுள்ளவர்கள் பிசாசுக்கு எதிர்த்து நின்றால், அவன் அவர்களிடத்தில் இருந்து ஓடிவிடுவான் (யாக்கோபு 4:7; எபேசியர் 6:16ஐக் காணவும்). முந்திய பாடம் ஒன்றில் நாம், சிலுவையினிமித்தம் சாத்தான், சகோதரரைக் குற்றப்படுத்துவதற்குக் கொண்டிருந்த உரிமையை இழந்தான் என்று கண்டோம் (வெளிப்படுத்தின விசேஷம் 12:12).[37] நமது தற்போதைய வசனப்பகுதியில், இழந்துபோகப் பட்டிருந்தவர்களை வஞ்சித்தல் குறித்து சாத்தான் கட்டுப்படுத்தப் பட்டிருத்தல் மீது வலியுறுத்தம் உள்ளது. சுவிசேஷத்தின் வெளிச்சம் இருளுக்கு ஒளியூட்டி, தங்கள் கண்களைத் திறந்திருக்கும் எவருக்கும், சாத்தானுடைய சூழ்ச்சிகளை வெளிப்படுத்துகிறது (2 கொரிந்தியர் 2:11).[38]*

*கடந்த நாட்களில், அடிக்கடி பயன்படுத்தப்பட்ட ஒரு விவரிப்பானது காட்டு மிருகம் ஒன்றைச் சங்கிலியால் கட்டிவைத்தலை, சாத்தானைக் கட்டிவைத்தலுடன் ஒப்பிட்டது. மிருகத்தின் பிடியில் இருந்து நாம் விலகியிருக்கும் வரையிலும், அந்த உயிரினம் ஊளையிடலாம் அல்லது கூச்சலிடலாம், ஆனால் அது நமக்குத் தீங்கிழைக்க முடியாது என்ற கருத்தைப் பிரசங்கியார்கள் அடிக்கடி ஏற்படுத்தினர். இருப்பினும், நாம் சாத்தானின் எல்லைக்குள் சுற்றித்திரிந்தால், அவன் கட்டிவைக்கப் பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், நம்மை அவன் நார் நாராகக் கிழித்துப் போடமுடியும். இந்த விவரிப்பானது ஒரு அலுப்பான கருத்தாக தோன்றும் அளவுக்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது, இது அலுப்பான தாயிருப்பினும், இல்லாதிருப்பினும், இன்னமும் இது மதிப்புக் கொண்டுள்ளது. நாம் கர்த்தருடைய மந்தையின் உறுப்பினர்களாய் இருக்கும் வரையிலும், நல்ல மேய்ப்பரை "நீதியின் பாதையில்" (சங்கீதம் 23:3) உண்மையாய் பின்பற்றுகின்ற வரையிலும், சாத்தான் நமது வாழ்வில் ஒருசிறிதளவே செயல்தாக்கம் கொண்டிருக்க முடியும்[39] "தேவனால் பிறந்தவன்" பற்றி யோவான், "பொல்லாங்கன் அவரைத் தொடான்," என்று கூறினார் (1 யோவான் 5:18). இருப்பினும் நாம் மந்தையில் இருந்து விலகிச் சென்றுகொண்டிருந்தால், அந்த "கெர்ச்சிக்கும் சிங்கம்" (1 பேதுரு 5:8) நம்முடைய உறுப்புகளை ஒவ்வொன்றாக கிழித்துப்போடக்கூடும்.*

*மீண்டும் ஒருமுறை, நாம் நமது வசனப்பகுதிக்கு திரும்புவோம்: தூதன் வலுசர்ப்பத்தைக் கட்டிப்போட்டபின்பு, அவர், "அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு, அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல்[40] முத்திரைபோட்டான்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:3அ). மூடப்பட்டு, முத்திரைபோடப்பட்ட பாதாளம், சாத்தானுடைய "[காவல் சிறைச்சாலை]" என்று பிற்பாடு (20:7ல்) குறிப்பிடப்பட்டது. தள்ளி, அடைத்து, முத்திரைபோடுதல் என்பவை, பிசாசின் செயல்கள் உண்மையில் தடைசெய்யப்பட்டிருந்தன என்ற சிந்தனைக்கு மெருகூட்டும் விபரங்களாக, அவன் தன்மீது சுமத்தப்பட்ட தெய்வீகக் கட்டுப்பாட்டை*

*முறித்து விடுதலையாகச் சாத்தியக்கூறில்லாத நிலையை விவரிப்பதாக உள்ளது. ("சாத்தான் பாதாளத்தில் தள்ளப்படுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

***அடையாளத்துவமான "கொஞ்சக்காலம்"?***

*நமது வசனப்பகுதியானது, "அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்" என்ற புதிரான வார்த்தைகளுடன் முடிகிறது (வசனம் 3ஆ). ''வேண்டும்'' என்பது "தார்மீக அவசியத்தை'' சுட்டிக் காண்பிக்கும் கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. சாத்தான் "கொஞ்சக்காலம்" ["a little season"; KJV] விடுதலையாக வேண்டும் என்ற சொற்றொடரால் அர்த்தப்படுவது எதுவாயிருப்பினும், அது தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் பகுதியாக இருந்தது. ஒருவேளை, "கொஞ்சக்காலம்" என்ற சொற்றொடர், "ஆயிரம் வருஷம்" என்ற சொற்றொடருடன் நேரெதிராய் இருப்பதை நோக்கங் கொண்டிருக்கலாம்: சாத்தான் ''கட்டிவைக்கப்பட்டிருக்கும்'' கால அளவுடன் ஒப்பிடும்போது, அவன் "விடுவிக்கப்பட்டிருக்கும்" கால அளவு மிகவும் குறுகியதாக, அற்பமானதாக இருந்தது.*

*சாத்தான் விடுதலைசெய்யப்படுதலும் அவனது கடைசி அடைவிடமும் 20:7-10ல் விவரிக்கப்பட்டுள்ளன. அந்த வசனப்பகுதியை நாம் பின்வரும் ஒரு பாடத்தில் படிப்போம்.*

## *முடிவுரை*

*இந்தக் கணத்திற்கு நான், இன்றைய நாட்களில் சாத்தான் கட்டிவைக்கப்பட்டு இருத்தல் என்ற கருத்தின்மீது கவனம் குவிக்க விரும்புகின்றேன். அவன் சிலுவையினால் தோற்கடிக்கப்பட்டுள்ளான். நம்மை விடுதலையாக்கியது (சிலுவை என்பது) சாத்தானைக் கட்டியுள்ளது![41] இது நாம் அகம்மகிழக் காரணமாக வேண்டும்.*

*மேலும் இது, நமது செயல்களுக்குத் தனிப்பட்ட வகையில் நாம் பொறுப்பு ஏற்றுக்கொள்ளக் காரணமாகவேண்டும். சிலர் தங்கள் பாவங்களுக்கு, பிசாசானவன்தான் "அதைச் செய்ய வைத்தான்" என்று சாக்குப்போக்குக் கூறுகின்றனர். பிசாசானவன் அச்சுறுத்தக்கூடும், பிசாசானவன் சோதிக்கக்கூடும், மற்றும் பிசாசானவன் அலைக்கழிக்கக் கூடும், ஆனால் பிசாசானவன் எவரொருவரையும் ஏதொன்றையும் செய்ய வைக்க முடியாது. அவன் கட்டப்பட்டிருக்கின்றான். ஆகையால் நம்மில் ஒவ்வொருவரும் தமது சொந்த செயல்களுக்குத் தாமே பொறுப்பாளியாக இருக்கின்றோம். ஒருநாளில், "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்'' (ரோமர் 14:12). நீங்கள் இழந்துபோகப்பட்டிருந்தால், உங்களைத்தவிர நீங்கள் வேறுயாரையும் பழிகூறமுடியாது![42]*

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*சாத்தான் கட்டப்பட்டிருத்தல் பற்றி நீங்கள் கலந்துரையாடுகையில், பின்வரும் எளிய வரைபடத்தை நீங்கள் பயன்படுத்த முடியும்:*




*மனித குலத்தின்மீது சாத்தானுடைய அதிகாரம் பாவத்தின் மூலமாகவே வந்தது. (இது ஆதியாகமம் 3ன் மூலம் விவரிக்கப்பட முடியும்.) பாவம் என்பது தேவனைப் பற்றியும் அவரது வழிகளைப் பற்றியும் அறியாமையைக் கொண்டுவந்தது. ஆதாமின் பாவம் சரீர மரணத்தை விளைவித்தது. பாவமானது, மனிதகுலத்தை வதைக்கும் குற்ற உணர்வையும் கொண்டுவந்தது. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பது அறியாமையை நீக்குகிறது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது குற்ற உணர்வை நீக்குகிறது - மற்றும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைக் கொண்டு வருகிறது.*

---

*குறிப்புகள்*

[1]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 249. [2]John Risse, "The Meaning of the Millennium," Sermon preached at the Southern Hills church of Christ, Abilene, Texas, 30 June 1991). "Kook" *என்பது அறிவுகலங்கிய, கிறுக்குத்தனம் உள்ள நபர் என்று அர்த்தமாகிறது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான சொற்றொடர் ஒன்றை இவ்விடத்தில் பதிலிட்டுக் கொள்ளவும்.* [3]Frank Pack, *Revelation*, Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 45. [4]Douglas Ezell, *Revelations on Revelation: New Sounds From Old Symbols* (Waco, Tex.: Word Books, 1977), 88-89. [5]W. B. West Jr., *Revelation Through First - Century Glasses*, ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 133. [6]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "வெளிப்படுத்தின விசேஷம் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஏழு உண்மைகள்" என்ற பாடத்தில் காணவும்.* [7]Adapted from Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock. Tex.: International Biblical Resources, 1976), 287. [8]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும், "நாம் ஜெயங்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் காணவும்.* [9]*"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "உங்கள் விரோதியை அறியுங்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [10]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "நாம் ஜெயங்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் காணவும்.*

[11]*நாம் காண்கின்றபடி, இவ்வதிகாரம் இயேசுவின் பூமிக்குரிய*

ஊழியத்தின்போது சாத்தானைக் கட்டுவித்தலைக் கொண்டு தொடங்குகிறது. இவ்வதிகாரம், 19ம் அதிகாரத்தின் முடிவில் உள்ள அதே "யுத்தத்துடன்" முடிகிறது என்று நாம் முன்பே உற்றுநோக்கினோம். [12]ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் இது ஒரு பிரச்சனையாக உள்ளது என்பதைப் புரிந்துகொண்டு, வசனப்பகுதியில் சுட்டிக்காண்பிக்கப்படாதிருந்தபோதும், 19ம் அதிகாரத்தில் ரோமப் பேரரசில் அழிக்கப்பட்டிராத "விளிம்புகளில்" உள்ள மக்களைப் பற்றிப் பேசுகின்றனர். [13]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 202. (Emphasisis.) [14]இந்தத் தூதன் கிறிஸ்துவாக உள்ளார் என்று சிலர் நம்புகின்றனர், ஆனால் இந்த நபர், கர்த்தருடைய ஆணையைச் செயல்படுத்த அவரால் பயன்படுத்தப்பட்ட பரலோக செய்தியாளர்களில் ஒருவர் என்பது தவிர வேறு யாராகவாவது இருக்கலாம் என்பதற்கு வேதவசனப்பகுதியில் மறைமுகமான குறிப்பு எதுவும் இல்லை. [15]மூலவசனத்தில் "on his hand" என்றுள்ளது. சங்கிலியானது, வெளியே நீட்டப்பட்ட தூதனுடைய கரத்தில் அமையப்பெற்று, அதன் முனைகள் கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருப்பதாக நாம் யூகிக்கவேண்டியிருக்கலாம். [16]"... கண்டேன்" என்ற வார்த்தைகள் வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட இலக்கியக் கருவியாக உள்ளன, இவைகள், இந்தப்பகுதியில் குறிப்பாக, ஒரு புதிய சிந்தனையை அறிமுகப்படுத்தப் பயன்படுகின்றன (20:1, 4 [இருமுறை], 11, 12; 21:1, 2). [17]"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற பாடத்தில் காணப்படும் "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" என்ற புத்தகத்தில் பாதாளத்தின்மீதான குறிப்புகளேக் காணவும். [18]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "கர்த்தர் அறிகின்றார்" என்ற பாடத்தில், இயேசு "மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோலை" கொண்டிருத்தல் (1:18) மீதான குறிப்புகளைக் காணவும். [19]West, 133. [20]"Yale" என்பது ஒரு பூட்டின் வியாபார அடையாளப் பெயராகும்; இவ்விடத்தில் உங்கள் உரையைக் கேட்பவர்களால் புரிந்துக்கொள்ளக் கூடிய வகையில் பூட்டிற்கான ஒரு வியாபாரபெயர் அல்லது பூட்டின் வகையொன்றைப் பதிலியாகப் பயன்படுத்தவும். (இவ்விடத்தில் தமிழகத்திற்கு நன்கு அறிமுகமான "திண்டுக்கல் பூட்டு" என்பது ஏற்புடையதாக இருக்கும்.)

[21]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 352. [22]"ஆயிரம்" என்ற வார்த்தையானது வேதவசனங்களில் பேச்சின் உருவகமாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சங்கீதம் 50:10ஐக் காணவும். நாம் இன்னும் இச்சொற்றொடரை உருவகநடையில் பயன்படுத்துகின்றோம்: "நான் உனக்கு ஆயிரந்தரம் சொல்லிவிட்டேன்!" [23]Thomas F. Torrance, *The Apocalypse Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 133. [24]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் "பத்து" என்ற எண்ணைக்குறித்துக் காணப்படும் கலந்துரையாடலைக் காணவும். [25]பழைய ஏற்பாட்டிற்குப் பழக்கமாயிருந்த வாசகர்கள், பத்துக்குப் பத்து அடிகள் அளவுடைய ஒரு சரிசமபக்கக் கனசதுரமாக இருந்தது என்று நம்பப்பட்டதான, ஆசரிப்புக்கூடாரத்தில் இருந்த மகாபரிசுத்த ஸ்தலத்தைப் பற்றி நினைத்திருக்கலாம். (தேவாலயத்தில் இருந்த மகாபரிசுத்த ஸ்தலம் இருபதுக்கு இருபதுக்கு இருபது அடிகள் அளவுடைய கனசதுரமாயிருந்தது [1 இராஜாக்கள் 6:20]. பொதுவான விதியின்படி, தேவாலயத்தின் அளவுகள் யாவையும் ஆசரிப்புக் கூடாரத்தின் அளவுகளைப்போல் இருமடங்காக இருந்தன.) [26]"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் உள்ள "வலுசர்ப்பம் எதையாவது சமீபத்தில் கொன்றீர்களா?"

என்ற பாடத்தில் 12:9-12க்கான குறிப்புகளைக் காணவும். [27]Ibid. [28]நடபடிகள் 5:3; 2 கொரிந்தியர் 2:11; 11:14; எபேசியர் 2:2; 6:11; 1 தெசலோனிக்கேயர் 2:18; 2 தீமோத்தேயு 2:26; 1 பேதுரு 5:8; வெளிப்படுத்தின விசேஷம் 2:13; 3:9. [29]ஒரு எழுத்தாளர், ''சாத்தான் கட்டப்பட்டும் கிறிஸ்து இப்போது ஆளுகை செய்துகொண்டும் உள்ளனரா?" என்று நம்பிக்கையற்று உரைத்தபோது, அவர் தாம் உணர்ந்தறிந்ததற்கு அதிகமானவற்றையே கூறினார். இப்போது சாத்தான் கட்டப்பட்டுள்ளான் என்பதற்குக் கூறப்படும் அதே மறுப்புரைகளே, இப்போது கிறிஸ்து ஆளுகை செய்கின்றார் என்ற கருத்திற்கு எதிராக மக்கள் கூறும் மறுப்புரைகளாக உள்ளன. "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "கடைசி எக்காளம்" என்ற பாடத்தில், கர்த்தர் இப்போது ஆளுகை செய்கின்றார் என்பது பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [30]நடபடிகள் 27 மற்றும் 28 ஆகியவற்றையும் பவுல் தமது முதல் சிறையிருப்பின்போது எழுதிய எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் ஆகிய நிருபங்களையும் வாசிக்கவும்.

[31]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 391. ஹோமர் ஹெய்லி என்பவர், சாத்தான் கட்டிவைக்கப்பட்டிருத்தல் என்பது "தண்டிக்கும் செயலாக" இருப்பதில்லை ஆனால் "தடைசெய்யும் செயலாக" இருக்கிறது என்று விவரித்தார். [32]சாத்தானைக் கட்டிவைத்தல் பற்றி ஏற்கனவே தரப்பட்டுள்ள வசனப்பகுதிகளை நீங்கள் திரும்பப் பார்வையிட முடியும் என்பதால் அதைத் தொடரும் தொகுப்புரையில் நான் அவைகளைப் பற்றிக் குறிப்பிடமாட்டேன். நீங்கள் இதை வகுப்பறையிலோ அல்லது பிரசங்கமாகவோ பயன்படுத்தினால், கேட்பவர்களுக்கு அதே அளவு இலாபகரமானதாய் இருக்காது; ஆகவே, நீங்கள் இந்த தொகுப்புரையை வழங்கும்போது அந்த வசனப்பகுதிகளை ஞாபகப்படுத்த விரும்பலாம். [33]"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "வலுசர்ப்பம் எதையாவது சமீபத்தில் கொன்றீர்களா?'' என்ற பாடத்தில் 12:11ன் மீதான விளக்கங்களைக் காணவும். [34]"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் ''வலுசர்ப்பம் எதையாவது சமீபத்தில் கொன்றீர்களா?'' என்ற பாடத்தையும் "யுத்தம் ஒன்று நடக்கிறது" என்ற பாடத்தையும் காணவும். [35]சாத்தான் கட்டுப்பட்ட இருந்த வேளையிலும்கூட, அவன் கிறிஸ்தவர்களைத் தொடர்ந்து கொலைசெய்துகொண்டிருந்தான். [36]Owen L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 348. [37]"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும் "வலுசர்ப்பம் எதையாவது சமீபத்தில் கொன்றீர்களா?'' என்ற பாடத்தில், குற்றம்சாட்டுபவனாக சாத்தான் என்ற தலைப்பின்மீதான குறிப்புகளைக் காணவும். [38]இன்றைய நாட்களில் சாத்தான் கட்டுப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றதற்கான கூடுதலான வழிமுறைகள் பற்றி நீங்கள் நினைத்துப்பார்க்க முடியலாம். சாத்தானுடைய செல்வாக்கினால் வேத சாட்சியாக மரித்திருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தனர் என்பதை உடனடி சந்தர்ப்பப்பொருள் காண்பிக்கிறது. இவ்விதமாகப் பிசாசானவன், கிறிஸ்தவர்களுக்குச் செய்யக்கூடியவற்றில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளான்: அவன் அவர்களைக் கொலைசெய்யக்கூடும், ஆனால் அவன் அவர்களை அழிக்கமுடியாது: அவன் அவர்களின் வாழ்வை முடிக்கக்கூடும், ஆனால் அவன் அவர்களின் வெற்றியை ஒன்றுமற்றதாக்க முடியாது. [39]அவன் நம்மை உடல்ரீதியாகக் கொலை செய்யலாம், ஆனால் நாம் கர்த்தருடன் நெருங்கி இருக்கின்ற வரையில், அவனால் நம்மை ஆவிக்குரிய வகையில் அழிக்க முடியாது. [40]தரிசனத்தில் பாதாளம், கிறிஸ்துவின் கல்லறையைப் போன்றே (மத்தேயு 27:66) முத்திரையிடப்பட்டிருந்தது.

*ஒருமுத்திரை என்பது, முத்திரையிடப்பட்ட பகுதிக்குள் எவரொருவரும் நுழைவதோ அல்லது அதிலிருந்து எவரொருவரும் வெளியேறுவதோ, கவனிக்கப்படாமல் இருப்பதில்லை என்பதை உறுதிப்படுத்திற்று.*

[41]Adapted from Eldred Echols, *Haven't You Heard? There's a WAR Going On!: Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 44. [42]*நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது எப்படி என்று கூறுங்கள் - மற்றும் அதைச் செய்யும்படி அவர்களை வேண்டிக்கொள்ளுங்கள். இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும், "என் ஜனங்களே, அவளைவிட்டு, வெளியே வாருங்கள்" என்ற பாடத்தின் முடிவு வார்த்தைகளைக் காணவும்.* [43]*"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் "உங்கள் விரோதியை அறியுங்கள்" என்ற பாடத்தில் 12:9ன் மீதான குறிப்புகளைக் காணவும்.* [44]*எரேமியா 51:37, 58;* KJV*ஐக் காணவும்.*

---

## *மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்*

1. *வெளிப்படுத்தின விசேஷம் 20 அல்லது இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியைப் பற்றிய வினோதமான கருத்துக்கள் எதையாவது நீங்கள் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா?*
2. *இறைவெளிப்பாட்டு இலக்கியத்தின் இயல்பைப் பற்றியும், அது அடையாளங்களின் மூலமாகத் தன் செய்தியை எவ்வாறு அறிவிக்க முடியும் என்பது பற்றியும் மறுகண்ணோட்டமிடவும். இது எவ்வாறு அதிகாரம் 20உடன் சம்பந்தப்பட்டிருக்கிறது?*
3. *வெளிப்படுத்தின விசேஷம் தொடக்கம் முதல் முடிவு வரை நாள்வரிசை முறையின்படியாக அமைந்துள்ளதா? நாள்வரிசை முறைமை பற்றிய வினாவானது 20ம் அதிகாரத்துடன் எவ்வாறு உறவுபடுகிறது?*
4. *20:1-10ன் அடிப்படைச் செய்தி என்ன? இது ஒரு உணர்வெழுச்சியூட்டும் செய்தியாக உள்ளது என்று இந்தப்பாடம் எவ்வகையில் கருத்துத் தெரிவிக்கிறது?*
5. *பாதாளம் பற்றி நாம் முன்பு படித்தவற்றை மறுகண்ணோட்டமிடவும். பாதாளம் என்பது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் (நரகம்) தானா?*
6. *திறவுகோலும் சங்கிலியும் நேரடி அர்த்தமானவைகளா? 20:1-10ல் நீங்கள் காணக்கூடிய மற்ற அடையாளங்கள் யாவை?*
7. *20:2ன் வலுசர்ப்பம் யார்? வலுசர்ப்பத்தை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களின் முக்கியத்துவத்தை மறுகண்ணோட்டமிடுவதற்கு 12:9*[43]*க்கான விளக்கங்களுக்குத் திரும்பிச்செல்லவும்.*
8. *"பத்து" என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவம் என்ன?*

*"ஆயிரம்'' என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவம் என்ன?*

9. *மத்தேயு 12:9ன் சந்தர்ப்பப்பொருளை ஆராயவும். அந்த வரலாற்றைக் கூறத் தயராய் இருக்கவும். பலவானைக் கட்டுதல் பற்றிய இயேசுவின் விவரிப்பினுடைய முக்கியத்துவம் என்ன?*
10. *சாத்தானைக் கட்டுதல் என்பது இயேசுவின் பிறப்பில் தொடங்கி அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் உச்சக் கட்டத்தை அடைந்தது என்று இந்தப் பாடம் போதிக்கிறது. இந்தக் கருத்துத் தொடர்பாகத் தரப்பட்டுள்ள குறிப்பு வசனங்கள் இதைப் போதிக்கின்றனவா என்று சரிபார்க்கவும்.*
11. *"கட்டப்படுதல்" என்ற வார்த்தையானது "முற்றிலும் செயலற்றவ ராக்குதல்" அல்லது "இயங்கக்கூடாதவராக்குதல்" என்று அர்த்தப் படுகிறதா?*
12. *மக்களினங்களை வஞ்சித்தல் என்ற விஷயம் குறித்து, இன்றைய நாட்களில் பிசாசானவன் எந்தக் கருத்தில் ''கட்டப்பட்டு'' இருக்கின்றான்?*
13. *இன்றைய நாளில் பிசாசானவன் இன்னமும் செயல்துடிப்புடன் இருந்தாலும், அவன் "கட்டப்பட்டு உள்ள" சில வழிமுறைகள் யாவை?*
14. *சங்கிலியால் கட்டப்பட்ட மிருகம் என்ற விவரிப்பு உதவி நிறைந்த தாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? தனிப்பட்ட பொறுப்பைப் பற்றி இந்த விவரிப்பு என்ன கூறுகிறது?*



சாத்தான் பாதாளத்தில் தள்ளப்படுதல் (20:3)